செய்தி வெளியீடு எண் :818 நாள் : 03.05.2023

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒடிசா மாநிலம், ரூர்கெலாவில் நடைபெற உள்ள 13-வது ஹாக்கி இந்தியா நேஷனல் சம்பியன்ஷிப் ஆண்கள் மற்றும் பெண்கள் சப்-ஜூனியர் பிரிவு போட்டியில் பங்குபெறும் தமிழக வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூபாய் 40 இலட்சம் மதிப்பிலான உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்களை இன்று (03.05.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

ஒடிசா மாநிலம், ரூர்கெலாவில் 13-வது ஹாக்கி இந்தியா நேஷனல் சம்பியன்ஷிப் போட்டிகள் வருகிற மே மாதம் நடைபெறுகிறது. சப்-ஜூனியர் பெண்கள் பிரிவு போட்டிகள் மே 4-ந்தேதி முதல் 14-ந்தேதி வரையிலும், சப்-ஜூனியர் ஆண்கள் பிரிவு போட்டிகள் மே 18-ந்தேதி முதல் 28-ந்தேதி வரையிலும் நடைபெற உள்ளது. இந்தப் போட்டிகளில் தமிழ்நாட்டில் இருந்து ஆண்கள் மற்றும் பெண்கள் அணி சப்-ஜூனியர் பிரிவில் வீரர்-வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர். இந்த வீரர்-வீராங்கனைகளுக்கு ஹாக்கி இந்தியா சார்பில் ரூபாய். 40 இலட்சம் மதிப்பிலான உலகத்தரம் வாய்ந்த ஹாக்கி ஸ்டிக் (Flash stick), பந்து (Kookaburra) மற்றும் கோல் கீப்பர் கிட் (OBBO kit) ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இன்று (03.05.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அணி வீரர்-வீராங்கனைகளிடம் இந்த விளையாட்டு உபகரணங்களை வழங்கிய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடைபெற உள்ள சாம்பியன்ஷிப் போட்டிகளில் மகத்தான வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் ஹாக்கி யூனிட் ஆப், தமிழ்நாடு தலைவர் திரு.சேகர் ஜே மனோகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஹாக்கி இந்தியா வழங்கிய 40 இலட்சம் மதிப்பிலான உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்களை ஆக்கி யூனிட் ஆப் தமிழ்நாடு சார்பாக ஒடிசா மாநிலத்தில் உள்ள ரூர்கெலாவில் நடைபெறும் 13-வது ஆக்கி இந்தியா சப்-ஜூனியர் நேஷ்னல் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவின் போட்டியில் பங்குபெறும் தமிழக வீரர்களை சந்தித்து அவர்களுக்கு ஆக்கி ஸ்டிக் (Flash stick), பந்து (Kookaburra) மற்றும் கோல் கீப்பர் (OBBO kit) ஆகிய உபகரணங்களை வழங்கி வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

இதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் திரு.சேகர் ஜே மனோகரன் தலைவர் ஆக்கி யூனிட் ஆப் தமிழ்நாடு, கிளமெண்ட் இணை செயலாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in